தேவியம்மன் [illegible]

©

O25:417
M12
142072

உ

வேலுமயிலுந் துணை.

# நீலியம்மன் காதல்

என்னும்

## திருநந்தாதிபக் காதல்

இஃது

மணல்நாடு

தென்னெலைப்பட்டம்

மகா-ா-ா-ஸ்ரீ

தேவண கவுண்டர்

க. நீலியண கவுண்டர்

முதலாகிய

அபிமானிகளின் வேண்டுகோளின்படி

காங்கயம்

அஷ்டாவதானம்

V. சேஷாசல நாயடு அவர்களால்

இயற்றப்பட்டு

கோயமுத்தூர், கிருஷ்ணவிலாச அச்சாபீசில்

பதிப்பிக்கப்பட்டது.

1912

025:417

N12

உ

வேலுமயிலுந்துணை.

# நீலியம்மன் காதல்.

என்னும்

## திருநந்தாதிபக் காதல்.

காப்பு.

செந்திரு மாது செறிமணலூர்த் தென்னெலைவாழ்
சுந்தரி நீலித்தாய் துணைத்தாண்மே—லந்திரு
நந்தாதீ பக்காதல் நாட்டிடத்தே வேந்திரலிங்கர்
மைந்தாநீ தந்தாள் வரம்.

கடவுள் வாழ்த்து.

தேவேந்திரலிங்கருயர் தென்னெலை நீலித்தாய்மேல்
நாவேய்ந்த நல்ல திருநந்தா தீபக்காதல் (1)

பாடியரங்கேற்றிப் பாருலகெலாந் தழையக்
கூடி வரமருள்வாய் கோலமிகு மைங்கரனே (2)

தூய சிவகாமி சுந்தர தேவேந்திரனர்
மேய மலரடியை வேண்டித் தொழுவோமே (3)

வல்ல மகிடாசுரனை வாட்டியருள் நீலியம்மை
செல்வி திருநந்தாதிபக் காதல் பாட (4)

மைவைத்த மேனி மணமலர் சூழ்ந்திட்டவெனும்
தெய்வப் பெருமாள் திருத்தாள் துணையாமே (5)

வரமுதவும் குப்பினியில் வாழ்வேங்கட ரமணப்
பெருமாள் முன்வந்து பெருகுமருள் தருவார் (6)

கந்தா சிவாசலம் வாழ் காங்கேயா தூயதிரு
நந்தா தீரக்காதல் நான்பாட நீயருள்வாய் (7)

வேலுமயிலென்றமொழி விள்ளுமென்றன் வாக்கினிலே
நாலுகவித் திரமும் நாட்டியருள் ஷண்முகனே (8)

தாயே சரஸ்வதியே சாற்றுதிருக் காதலுக்கு
நாயேன் மனந்தனி லெந்நாளுந் துணையிருப்பாய் (9)

ஸ்ரீஹிமயேஸ்வரியே நின்மீது பாடவருள்
பாலித்திடுவாய் பரம தயாகரியே (10)

விருப்பண்ண யாவருக்கும் வேண்டுவரந் தருகும்
கருப்பண்ணசாமி கழல்பணிந்து போற்றிடுவாம் (11)

வேல் வாள் வில்லம்பு கொண்டு வீரமிகும் நீவிதனி
மேல்வாசல் மாமதுரை வீரன் பதம் பணிவாம் (12)

நன்மையருள் அரிய நாச்சி பெரியக்காண்டி
யம்மையராம் தோழியர்கள் அம்புயத்தாள் போற்றிடுவாம் (13)

தேச கருணீகர்குல தெய்வமெனு மா பூத
ராசனையும் அம்மனையும் நாடித் துதித்திடுவாம் (14)

கூவி யழைக்கவந்து கூடுகுல தெய்வமெனும்
தேவிபணசாமி திருவருளைத் தந்திடுவார் (15)

மாமேவும் நல்லிநகர் மாரி மனோன்மணியாள்
தேமேவு கஞ்சத் திருத்தாள் துணையாமே (16)

சிந்தமணி யான்பொருளைச் சின்னத்தாராபுரம் வாழ்
வந்தமுனி முக்தீசர் வள்ளல் பதம் போற்றிடுவாம் (17)

மாசிமகத் தேரோடும் வல்ல சின்னத் தாராநகர்
வாசியகிலாண்ட வல்லிபதம் போற்றிடுவாம் (18)

நாரணிய கோரிகன ராணிதிரி சூலிமணி
வாரணியும் காளியம்மன் மாமலர்த்தாள் சிந்தைசெய்வாம் (19)

பொன்னிவளஞ் சேர்முகனூர்ப் பூரண தயாநிதியாம
மன்னுங் குமரீசர் வந்து துணை புரிவார் (20)

ஆளிதனி லேறிவரும் அந்தரி துரந்தரி பொன்
காளியம்மன் கஞ்சக் கழல்பணிந்து போற்றிடுவாம் (21)

ஆவணக்காப்பக
14702

பாவிலடியார் பரவும் புகழ் முகனூர்
நாவலடியான் நமக்குத்துணை வருக (22)

மானிலம் பாடி வளர் நாட்டுராய துரை—நீ
தேனீரசத்தாளைச் சேவித்துக் காதல் சொல்வாம் (23)

துஷ்டர்களை வதைக்கும் சூரமகா முனிவர்
சட்டமிகும் தாழ்பணிந்து தண்டமிழ்க் காதற்புகல்வாம் (24)

அள்ளி விபூதி யருளியெமை யாண்டருளும்
கள்ளியங்காட்டுக் கருப்பண்ணன் றாள்பணிவாம் (25)

தூய திருக் கோவில் நகர் தோன்றுங் குல குருவாம்
ஐயர் சரணாரவிந்தம் சென்னியில் வைத்துப் புகழுவாம் (26)

பந்தமிகும் பால பாரதி முத்துச்சாமி
செந்தமிழாசானைத் தினமும் துதித்திடுவாம் (27)

சங்கத் தமிழுணர்ந்த தண்டமிழ்ப் பாவாணர்பத
பங்கயத்தை வாழ்த்திப் பரவுதிருக் காதல் சொல்வாம் (28)

மூவேந்தர் தோன்றி முளைத்த நாடு தமிழ் நாட்டில்
பாவேந்தர் போற்றிப் பகர் சேர நாட்டினிலே (29)

கூடப் பிறந்து வளர் கொங்கனுக்குச் சேரமன்னன்
நீடித்த எல்லை நிலைபிரித்துத் தந்ததினால் (30)

மன்னு புகழ்க் கொங்கு மண்டலப் பேரைப் புனைந்து
சொர்ன வருஷம் சொரியுந் திரு நாடு (31)

மல்லிகை முல்லை யிருவாட்சி செண்பகம் முதலாய்
புல்லிமணைப்பேரைப் பூண்ட கொங்கு மண்டலமாம் (32)

கீழ்மேலுங் கொல்லி வெள்ளி கேழல்தலை தென்வடலாய்
வாழ்வாக எல்லை வகுத்த கொங்கு மண்டலமாம் (33)

நாடு கருவை வெஞ்சை நற் கறைசை புக்கொளியூர்
கூடல்குன்று வேள்பூண்டி கொண்ட கொங்கு மண்டலமாம் (34)

மேலைச் சிதம்பரமும் மேவு குரக்குத் தளியும்
சாலப் படைத்துத் தழைத்த கொங்கு மண்டலமாம் (35)

இ25:417
N12

நாடும் அருணகிரி நாதர் புகழ் கொண்ட குகன்
நீடும் வரைகள் நிறைந்த கொங்கு மண்டலமாம் (36)

பொன்னி நதி வாணி பொருணை ஷண்முகங் காஞ்சி
பன்னு சர பங்கமணி பாய் கொங்கு மண்டலமாம் (37)

தென்பாண்டிச் சொக்கர் தருஞ் செந்தமிழுக்காக மிகு
பொன்பாணர்க் கீந்தபுகழ்க் கொங்கு மண்டலமாம் (38)

வல்ல தமிழதிக மானவ்வையார்க் கிறவா
நெல்லிக் கனிதந்து நீண்ட கொங்கு மண்டலமாம் (39)

சீர்கொளெழி பத்தர் கரூர்ச் சித்தர் புகழ்ச் சேரமர் திருப்
பேரிசைப்பா நாதர் பெருகு கொங்கு மண்டலமாம் (40)

தில்லையி லாதித்தன் திருக்கோவில் கட்டுதற்காய்
எல்லையிலாப் பொன்வாரி யீந்த கொங்கு மண்டலமாம் (41)

இத்தகைய கீர்த்தி இசைந்த கொங்குமண்டலத்தில்
வைத்திடு நாலாறுள் வளரு மணநாடு (42)

திங்களு மும்மாரி சிறந்து வளர் தென்னெல்வாழ்
மங்கள தேவேந்திரலிங்கர் வாழு மணநாடு (43)

தூய சிவகாமியம்மை சொர்ன நிதி சொரிந்து
நேயமுடனே நிலைத்த மணநாடு (44)

காஞ்சி பொருணை யுடன் காட்டு முன்னூர் மொஞ்சைநகர்
வாஞ்சைமிகும் எல்லை கொண்டு வாழு மணநாடு (45)

வல்ல முதற் காளிதொட்டு வாழ்முதன்மை பன்னிரண்டு
புல்லிப் பெருகிப் பொலியு மணநாடு (46)

காணுங் கயிலாசர் காமாட்சி யம்மை நிலை
பேணிவளர் கூடற் பெருகு மணநாடு (47)

ஆளவந்த நாதருடன் அம்மணியார் வாழ வந்தார்
நீளவந்த தென்னடர்ந்தை நேரு மணநாடு (48)

சொல்லுங் கைலாசர் தூய்மை மிகுங் கமல
வல்லிநிலை கோடநகர் மன்னு மணநாடு (49)

காடுமுனி முக்தீசர் நாதரகிலாண்டவல்லி
கூடியுறை தாரைநகர் கொண்ட மணணாடு 50

பொன்னாச்சி யங்கு பொருந்திய சூடாமணியில்
தன்னாட்சியாகத் தழைத்த மணணாடு 51

காசிவிஸ்வநாதருடன் காசிவிசாலாட்சியரும்
நேசமிகும் ராஜபுரம் நீளு மணணாடு 52

காணு[illegible] நர்சிங்கர் காமாட்சி பொம்மக்காள்
பேணும் இலவன்னூர் பெருகு மணணாடு 53

கொப்பலரும் பொற்கிரியும் கோலமலை விண்டுவரை
ஒப்பில் குமரப்பொருப்பும் ஓங்கு மணணாடு 54

காரோட்டு மேனிக் கடாக்களைப்பூட்டிக் கரும்பால்
ஏரோட்ட முத்துதிர எற்றமணணாடு 55

ஆன்பொருனை காஞ்சி அருள்பெருகும் பொன்னிநதி
தேன்பொழியப் பாய்ந்து சிறக்கு மணணாடு 56

நெல்லுங் கரும்பும் நிறைந்த கதலியும் சீர்
புல்லித்தரளம் பொலியு மணணாடு 57

மாவும் பலாவும் வளர் கதலியுங்கனிந்து
மேவும் வயல்கள் விளையுமணணாடு 58

வண்டரிசைபாட மயில்கள் நடமாடக்
கொண்டல் செழித்துக் குலவுமணணாடு 59

## பட்டக்காரர் சிறப்பு.

இத்திரு நாட்டுக்குள் இருந்தரசு செய்சுகுணன்
சத்திமிகு தேவியண சாமிபதம் போற்றிடுவோன் 60

காளத்தி நாதரருள் காட்டுமுதற் காளிகுல
வேளொத்த லாவணியன் வெட்டுவ ராஜேந்திரதுரை 61

மங்காத கீர்த்திபெற்ற வாளரசு ராமனெங்கும்
செங்கோல் செலுத்திவரும் தேவண நராதிபதி 62

## தென்னெல்லை சிறப்பு.

பட்டந்தரித்த படைமன்னர் சூழ்ந்திடவே
திட்டமுடனோங்கும் தென்னெல்லை மாநகரம் 63

மாதவர்கள் வேதவொலி மாறாமலே தழையத்
தீதணுவுஞ் சேராத தென்னெல்லை மாநகரம் 64

சத்திரமுஞ் சாவடியும் சாலை தண்ணீர்ப்பந்தல் மடம்
சித்திரத்தேரும் பெருகும் தென்னெல்லை மாநகரம் 65

சந்தமிகுந் தேவாரஞ் சாஸ்திரமெலாம் புகலும்
செந்தமிழ்க் கூடம் பெருகுந் தென்னெல்லை மாநகரம் 66

நால்வருணத்துள்ளும் நடைபிறழாமற் சிறந்த
சேல்விழி மானார்கள் நிறை தென்னெல்லை மாநகரம் 67

வானவர்கள் பூசை மறையோர்கள் பூசை நிதம்
தியானமுடன் புரியும் தென்னெல்லை மாநகரம் 68

நல்லதளிக்கோட்டை நாடுதென்னெல்லைக்கோட்டை
செல்வர்நிதிக் கோட்டையடர் தென்னெல்லை மாநரம் 69

தந்தமதமாவும் தாவிவரு மாமசவும்
சிந்திடக் கந்தங்கமழும் தென்னெல்லை மாநகரம் 70

ஓங்கும் பருதிமதி உட்புகுத மாட்டாமல்
தேங்கு மனையுயரும் தென்னெல்லை மாநகரம் 71

மைவிழியாருங் கற்பு மாறாமலே நடந்து
தெய்வ வழிபாடுபுரி தென்னெல்லை மாநகரம் 72

சங்கீத மேளம் தவில் முரசு நாகசுரச்
சிங்காரம் ஓங்குமணத் தென்னெல்லை மாநகரம் 73

வந்த விருந்தினர்க்கு வாடாமுகங் காட்டிச்
சிந்தைமகிழ்ந்தளிக்கும் தென்னெல்லை மாநகரம் 74

பாவலரைத் தேடிப் பரிசுதவித் தங்கள் நகர்
தேவர்களைப் பாடவைக்குந் தென்னெல்லை மாநகரம் 75

கோவித் தடித்த கவி கொண்டிடக்கை யாழியிட்டுச்
சேவித்த மாலாளும் தென்னெல்லை மாநகரம் 76

உத்திரத்துக் காவடிகட் கோங்குபழம் பாலினீர்
சித்தியுடனுதவும் தென்னெல்லை மாநகரம் 77

தேருந்திருநாளும் சீர்பெருகுங் கட்டளையும்
சேரும்படியிசைக்கும் தென்னெல்லை மாநகரம் 78

இந்[illegible]த வளங்கள் என்றுங் குறையாமல்
சந்ததமும் ஓங்குமிந்த தர்மமிகு மாநகரில் 79

## நீலியம்மன் சிறப்பு.

வெட்டுவ ராஜக்குலத்தில் மேன்மைமிகுந் தேவணமால்
இஷ்ட குல தேவதையாம் ஏர்பெருகும் நீலியம்மன் 80

நாரணி கல்யாணி கன ராணியபிராமிகன
சீரணியதாகவளர் தேவியெனு நீலியம்மன் 81

வேண்டுமடியருக்கு மிக்கவரந் தந்தருளத்
தாண்டும் அரிமீதுவருந் தர்மமிகு நீலியம்மன் 82

துட்ட மகிடனுடல் துண்டுசெய்து வானவர்கள்
கட்டந் தவிர்த்தருளும் காருணிய நீலியம்மன் 83

ஆங்காரங் கொண்டவர்கள் அஞ்சிடச் சூலம் விடுத்துப்
போங்காலனூர்க் கனுப்பும் போரிலுயர் நீலியம்மன் 84

வல்ல கருப்பண்ணன் மாபூத ராஜனொடு
சொல்லு மதுரைத் துரையும் சூழ வரு நீலியம்மன் 85

மாதவி கங்காளி வயிரவி கபாலியெனப்
பூதலத்தில் யாவர்களும் போற்றவருள் நீலியம்மன் 86

அண்டினவர்க் காதரவாய் அன்புடனே வந்தடிமை
கொண்டவரை யாண்டருளுங் கோலமிகு நீலியம்மன் 87

தாருகனைச் செற்றரண சாமுண்டி மாதரி கௌ
மாரி சிவகாமியென வந்தருளும் நீலியம்மன் 88

இந்த மகமாயிக் கேற்றதினக் கட்டளையும்
சந்த மிகுந்ததழை திருவிழாக்களெல்லாம் 89

செய்துவரு கின்றரா சீர்பெறவே காலமழை
பெய்து வருகின்றதுவா பேதமுண்டோ வென்றுசொல்லி 90

## நீலியண்ணப் பிரபு சிறப்பு

கொற்றப் புயமுடைய கோலமிகு ரூப மதன்
சிற்றப்ப ராஜனெனச் சேர் நீலியண்ணதுரை 91

எண்ணூன்கரத்தினிலு மேற்ற தன்ன தானமெனத்
தண்ணீர் பாலன்னந் தருநீலியண்ண துரை 92

சந்தத் தமிழருமை தானுணர்ந்து பாவலரைச்
சொந்தமெனக்கொண்டு சுகிநீலியண்ணதுரை 93

தம்மரபுக் கேற்றல் தருகை யெனவே நினைந்து
செம்மையறங் குன்றமற்செய் நீலியண்ணதுரை 94

வாய்மை பொறை யொழுக்கம் மாறுமல் தீமையென்றல்
சேய்மை யடையுமெங்கள் சீர் நீலியண்ணதுரை 95

என்று புகலும் எழிற்சிறிய தந்தையரை
நன்றனத்தன்பாலழைத்து நற்சுதன்றேவண்ணதுரை 96

## நீதி விசாரணை

தந்தைக்கிளைய தரும சிகாமணியே
இந்த மணல் நாட்டில் ஏதேனுந் தீமையுண்டோ 97

தானந் தவங்குறைந்து சத்தியங்களற்றனவோ
வானம் வழங்காமல் மானிலஞ்சீர் குன்றுவதேன் 98

காரணங்களுண்டாகிற் காட்டியருள்கவெனப்
பூரணமதாய்க் கேட்டான் புத்திரசிகாமணியும் 99

நாடும் நமதுகுல ராஜஸ்ரோ ரத்தினமே
நீடும் புகழ் பெருகும் நீலியம்மைத் தாயார்க்கு 100

என்றுங் குறையா திலகிடு நந்தாதீபம்
மின்று முறைபிறழ்ந்து நீதி குறை வுற்றதினல் 101

வந்தகுறைவல்லாமல் மற்ருேர் குறைவுமில்லை
அந்தக்குறைவை அகற்றிவைக்க வேண்டுமென 102

## தேவணப் பிரபு சிறப்பு

மங்குலடரும் வனநகர்க்கா ளத்திகுலம்
தங்கு சுகுணன் தனதனிணையான செல்வன் 103

செந்தாமரை முகத்தாள் சீர்பெருகு நீலியம்மன்
நந்தாதீபத்தை நடத்த முயற்சி செய்து 104

தக்க சிநேகிதர்க்குத் தர்ம வழி மார்க்கம்
மிக்கவெடுத்துரைத்து வேண்டுநிதி சேகரித்து 105

பண்டாகத்தந்து பரவு மணஞட்டில்
கொண்டாடிப் போற்றும் குபேர கனதனவான் 106

எஞ்சிய நிலாவணிபன் என்றிடுமாலவணியன்
மிஞ்சருள்சேர் லாவணியன் வெற்றியுணல்லாவணியன் 107

நீதமுடி மன்னனுக்கும் நீலியண வேந்தனுக்கும்
போதமிகு நேயம் பொருந்தும் சிநேகிதவான் 108

கற்றவர்க்குக் கற்பகமாம் கல்லார்க்கு வல்லிடியாம்
கொற்றவர்கள் போற்றும் குணமதுர ரஞ்சிதவான் 109

தஞ்சமென வந்தவரைத் தாங்கும் தயாள குணன்
பஞ்சவரிலே சிறந்த பார்த்தனெனச் சொல்சமர்த்தன் 110

முன்னோர்கள் கட்டி முடித்து வைத்த தர்மமெல்லாம்
எந்நாளுமோங்கி யிருக்க முயற்சி செய்வோன் 111

விற்பனஞ்சேர் நீலியண வேந்தனிணை நம்மையொரு
சொற்பனத்திலும் மறவாத் தூய மனதுடையான் 112

பூவணமால் போற்றிப் புகழ் நீலி யம்மை யன்பன்
தேவணமாலீன்றருளும் தேவணவே ளேதுசொல்வான் 113

ஆமாமது நிசமே அப்படியே செய்தல் நலம்
காமா முயற்சிகளை நன்குசெய்ய வேண்டுமென்றான் 114

தேவணனும் நீவியணச் சீமானுமிந்த விதம்
மேவியுரைத்த விபரமெல்லாந் தான்கேட்டு 115

கோடையினுஞ் சிறந்து கோடையெனச் செல் தூதர்
ஓடியவரவர்பா லுற்றமொழியைப் புகன்றார் 116

## கிளைஞர் வருகை.

தங்கள் குல தர்மனெனும் சர்க்குணஞ்சேர் தந்தைபின்னோன்
புங்கமிகு தேவிலிங்கர் பொன்னடி பூசித்திடுவோன் 117

நீதி மிகுந்து நெறியுயர் விற்பன்னதுரை
ஓதி வரும் பாவலருக் கோர் கற்பகதாரு 118

ஓங்குமலைய நகருற்ற முதற்காளி குலன்
பாங்குபெறு நீலியணப் பார்த்தனருள் புத்திரனும் 119

நகரம் புனைந்த நல நீவியண்ண துரை
சிகரம் பெருகுஞ் சிலையெனவே வந்தடைந்தான் 120

வண்ண வயற் சூழ்மலைய மாநகரி லோங்கிவளர்
கண்ணப்பர் தோன்றிக் கதித்திடுங்காளத்தி குலன் 121

தண்ணீர்ப்பந்தற் றருமன் சாதுசனர் நேசமிகும்
புண்ணியவான் நீவியண பூமனருள் புத்திரனும் 122

தேவேந்திரலிங்கர் சிவகாமித் தாயாரைப்
பூவேந்தர் போற்றிப் புகழ் தேவியண்ணனையும் 123

நீதமிகுந்து வளர் நீவியம்மைத் தாயாரைப்
பாதம் பணிந்து பரவு முதற் காளிகுலன் 124

தூய துரைச்சாமி யெனச் சொல்விவளர் தேவணமால்
நேயமிகுந் தன்றமயன் நேர்ந்த சபை வந்திருந்தான் 125

துட்டரைக் களத்தினிற் றுடித்திடச் சிரத்தறுத்துச்
சட்டமுற்று வெற்றி பெற்ற சக்ரதரனுக்கிணையான் 126

* ஒன்றொருரு மாடங்கொள் உலுத்தருற வொட்டாது
நின்ற கொடை வள்ளலெனும் நீலியணமாலீன்ற 127
நீதன்னலஞ்சேரும் நேயமிகு சற்குண நன்
நீதன் பணிவுடைய நேர்பழனிச் சாமிதுரை 128
மங்காத கீர்த்திபுனை மாமதன ராஜனெனும்
சிங்காரன் தேவணமால் சேர்சமுகம் வந்திருந்தான் 129
வல்ல திருக்காளத்தி மாகுலத்துக் கோர்பரிதி
சொல்விலரிச்சந்திரன் சுகுண கன தேவணமால் 130
ஈன்றெடுத்த சற்குணவான் ஏறும் பரி நகுலன்
வான்றருவையொத்தகொடை வள்ளல் மரபிற்கொருவேள் 131
மங்கையர்கள்தேடி மடலெழுது சித்தசனும்
செங்கையுடைய ஜெயவிஜய காண்டீபன் 132
வித்துவதாரதரஞ்சேர் விற்பன சிகாமணியாம்
சத்துவ குணத்திற்றழை ராமசாமி துரை 133
என்ற மதவிமன் ஏர்கொள்குல மன்னனெனும்
தன்றமயன் வாழும் சமுகமதில் வந்தடைந்தான் 134

## காட்டுப்பாளையம்.

துன்னும் வனநகரிற் றேன்ற முதற் காளிகுலன்
பன்னிப் புகழும் பழனிமலை ராசேந்திரன் 135
தென்னெல்லை யம்மன் றிருக்கோவிலும் குறடும்
முன்னிலையாய்க் கட்டி முடித்துவைத்த புண்ணியவான் 136
நண்ணியகுன்னிப்பரப்பில் நாடுமுத்தி ரத்தினுக்குத்
தண்ணீர்ப்பந்தற் சமைத்த தருமன்மரபில் வந்தோன் 137
தேவணமாலீன்ற சிறந்தமக்க ளைவரிலே
மேவிரண்டாம் புத்திரனு மேதினியில் வந்துதித்தான் 138

---

* கபடம்.

சாந்தம் புகழ் ஒழுக்கம் தர்மகுணம் யாவும்
வாய்ந்து வனரும் மதியூகி யானசெல்வன் 139

நீலியம்மைத் தாயை நினையாமலே யெந்த
வேலையும் செய்யாத விரதமுடைய மன்னன் 140

பேச்சினுயரும் பெருமை படைத்துவளர்
நாச்சியண ராசன் நலங்கொள் சபையடைந்தான் 141

அட்டதிக்குங் கீர்த்திபெற்ற ஆரணியமாநகரில்
கட்டழகனான திருக் காளத்தி வங்கிசத்தான் 142

ஆன கமிட்டி யதிகார நாச்சியணத்
தான கருணன் தனையனென்ன வந்துதித்தோன் 143

வாமமிகு தாம மருவு புயராம்
சாமி மகிபன் சபைதனிலே வந்தடைந்தான் 144

இத்தருமன் பின்னுதித்த ஏர்கொள் சிரஞ்சீவி
நத்தும் புகழுடைய நாயக விவேக துரை 145

வெட்டுவ ராசக்குலத்தில் விற்பனனாகச் சிறந்த
கட்டழகனான திருக் காளத்தி வங்கிசத்தான் 146

சந்தான விர்த்தி தழைந்து புகழ்பெருகும்
நந்தாத கற்பகம்போல் நாளுந் தருந் தியாகி 147

தென்னெல்லைத் தேவர்களைத் தியானம் புரிந்து நிதம்
உன்னிய தன் வேலையெலாம் உற்றபடியே முடிப்போன் 148

தந்தை பெயரே தனக்குத் தக்கதெனப் பெற்றுவளர்
சுந்தரஞ்சேர் நாச்சியணத் துல்லியனும் வந்துதித்தான் 149

மன்னும் வனநகரில் வாழ்முதற் காளத்திகுலந்
துன்னிவளர் நீலியண சுந்தரவேளீன்ற மைந்தன் 150

நீராரும் செஞ்சடைகொள் நித்தனடி போற்றுகின்ற
சீராரும் தேவணமால் சேரும் சபையடைந்தான் 151

செந்தேன் பொழியுமலர்த் தேவேந்திர மாநகரில்
நந்தாத கீர்த்திபெற்ற நல்ல முதற் காளிகுலன் 152

வாணருக்குமெத்த வரிசைதரு தேவணமால்
பேணுமைந்தன் றேவணமால் பெட்புடனே வந்தடைந்தான் 153
மங்காத கீர்த்திபுனை வள்ளல்முதற் காளிகுல
சிங்காரதேவணமால் செய்தவத்தில் வந்துதித்தோன் 154
மெத்தப் பணிவுடைய விற்பன சிகாமணியாம்
சத்துவ குணத்திற் றழைத்தபொன்னுச் சாமிதுரை 155
தன்பின்னுதித்த தருமகுணசீலன்
அன்பின முதிர்ச்சி யடைந்தவரோதயனும் 156
தருசாமி யென்றபுகழ் தாரணியிற்கொண்ட
குருசாமி மன்மதன்றன் கூட்டசபையடைந்தா 157
மஞ்சேரிப் பெய்யும் வளஞ்சூழ் மருதமடர்
செஞ்சேரி மாநகரிற் சேருமுதற் காளிகுலன் 158
சத்தையன் சென்னிமலைச் சண்முகவேளைப்பணியு
முத்தையராஜன் முதுதவத்தில் வந்துதித்தோன் 159
மன்னிமலையெனவே மாண்புபெறுவாள வீமன்
சென்னிமலை நிதன்சீர்கொள் சபையடைந்தான் 160
மவாலநாய்க்கன் வளநகரில் மேவிவளர்
பூவாருங்கீர்த்தி புனைந்தமுதற் காளிகுலன் 161
சீலமிகுந் தென்னெல்லைத் தேவதைகளைப் பணிந்தெக்
காலமதிலும் கனிந்துதுதி செய்வோன் 162
பந்தநிறை தேவணமால் பாலனென வந்துதித்த
சந்தமிகுராம சாமிதுரை வந்தடைந்தான் 163

## நல்லாக்கவுண்டன்.

மாநிலத் தோரேத்தும் மலையநகர்வாசன்
தேனிறைந்த ஆதிக்கரசநகாச செம்பூத்த நற்குலத்தான் 164
நற்கரிய காளியுடன் ரத்தினமூர்த்தித்துரையை
மிக்கவளஞ்சேரும் வேற்பெரிய நாச்சியரை 165

மன்னிவளர்குப்பணனை மாமதுரை வீரனையும்
பன்னித்துதித்துப் பரவுகொத்துக்கார மன்னன் 166

நல்லணமா லீன்றெடுத்த நல்லணமா லென்றபெயர்
சொல்லுமதியன துரிதமுடன் வந்தடைந்தான் 167

தண்டமிழோன் றன்மனத்திற் சந்தேகந்தீரர்கூர
உண்டவயிற்றைப்பீறி யூற்றிய கங்காகுலத்தான் 168

மானமிகுங் கூனநகர் வாழுமேழித்துவசன்
தானகர்னனென்னத் தழைக்கு மதியூகி 169

வாணர்புகழ் கோடந்தைவாழ் ராஜாவையனையும்
காணுமுயர் சென்னிமலைக் கர்த்தனையும் போற்றிடுவேன் 170

கேட்டவுடனே மூளையுங்கிரையுடமே யிசருக்கு
நாட்டமுடனே யளித்த நாடுபுகழ்கிரைகுலன் 171

சென்னிமலை மானுதவுசெய் ராமசாமிதுரை
நன்னமவேள் தேவணமால் நற்சபையில் வந்தடைந்தான் 172

முத்திருக்குந் தண்வயல்சூழ் முந்துபுகழ்க் கூனநகர்
ஒத்திருக்கும் கோடைநகர் ஓங்கியநற்கீரைகுலனை 173

அன்புமிகு ராசாவையனையும் சென்னிமலை
யின்பமிகு மெய்யனையும் எர்கரியகாளியையும் 174

முத்துக்கருப்பணனையும் முன்புற கருப்பணனை
சததிமிகு மாந்தைபுரச் சாமியடிபோற்றி 751

தந்தைபெயர்பூண்டு தழைத்துவளர் சென்னிமலைச்
சுந்தாவிலாசன் சுகமுடனே வந்தடைந்தான் I76

மங்காத கூனநகர்வாளபிமன் கம்பர்புகழ்
கங்காதனையன் கதித்துவளர் கீரைகுலன் 177

சங்குமணியிலகுந் தண்பனைசூழ் கோடைநகர்
மங்களமதாகவளர் மாராசாவையனையும் 178

தென்னையெனக் கன்னலுயர் செநநெல்வயல் மன்னிவளர்
வன்னமிகும் சென்னிமலை மன்னனையும் முன்னிடுவோன் 179

பாவலர்களுக்குப் பரிசுதவும் ராசாமால்
மேவுதவகுப்பணமால் வேந்தன் சபையடைந்தான் 180

மாதவர்கள் ஓங்கி மகம்புரியுங் கூனநகர்
நீதனெனுங் கீரைகுல நேயசிகாமணியாம் 181

வேடந்தையாரும் விமலரும் சின்னம்மனும்வாழ்
கோடந்தை ராசாவைக் கூர்சிரகிரிக்குகனை 182

சந்ததமும் போற்றிவளர் சற்குணஞ்சேர் நல்லணமால்
மைந்தனெனும் ராசாமகிபதியும் வந்தடைந்தான் 183

காணுமுலையாம் பூண்டிக் காடைகுலத்தித்த
ஆணமுகன் செல்லாண்டியம்ம னடிபிணையும் 184

புங்ககுறுக்கத்தி பொலிந்திடு சின்னச்சாமி
மங்களமதாக வளர்பெரிய சாமியையும் 186

முத்துக்கருப்பண்ண மூர்த்தியையும் நான்முகனை
ஒத்துக்கருப்பண்ண வொட்டாமலே சிறைவை 185

சத்திசிவன் மாமலைவாழ் ஷண்முகனையும் பணிந்து
நத்தும்பழனிமலை நாயகன் றவத்துதித்து 187

கூனநகரிற் குடியோங்கும் குப்பணமால்
ஞானமிகுங் தேவண்ணராசன் சபையடைந்தான் 188

வண்டரிசை பாடிமகிழ் கூனமாநகரிற்
கொண்டலெனும் வெள்ளகவிற் கூடுந்தனஞ்சயனும் 189

சாரக்குமாரியர்கள் சாரவிரு பாலோங்கும்
வீரக்குமாரர்பதம் வேண்டித் துதிபுரிவோன் 190

வெள்ளகற கருப்பணனை மேவிவளர் சென்னிமலைப்
புள்ளிமயில் வேலவனைப் போற்றித் துதித்திடுவோன் 191

காசாரும் பொற்பணிகள் கற்றகவிஞர்க்குதவும்
மாசிலன் செல்லப்பமன்னன் றவத்துதித்தோன் 192

பாக்கியஞ்சேர் காங்கேயன் பாததியானம்புரியும்
ராக்கியணசீலன் நலமுடனே வந்தடைந்தான் 193

142022

வல்லகருப்பணனை மாகரியகாளியரை
அல்லும்பகலும் அனவரதமுந் துதிப்போன் 194

காவிரிசூழும் முகனூர்க்கண்ணந்தை கோத்திரமால்
நாவலடியான்குமரி நாகனையும் போற்றிடுவோன் 195

ஏரொழுபதுங் கொண்டிலங்கிய கங்காகுலத்தில்
சீரிலுயர்செல்லப்ப சீலனருள் புத்திரனும் 196

உற்றசிறபவேலையுயர் ஆரியூரினிவிலே
பற்றுங் கருப்பண்ணன் பாததியானம் புரிவோன் 197

பாவியப்ப வென்றுவரும் பாவலர்கட் கோர்தருவாம்
நீவியப்பவீரன் நிமிடத்தில் வந்தடைந்தான் 198

மாமுகனூர்க் கண்ணந்தை வங்கிசத்தான் நாவலடி
சேமமுடன்வளரும் சேகரனை வீரமிகும் 199

ஆன்பொருனை ஆழும் அருங்கரையி னம்மனடி
தேனபொழியு மரமலரால் சேவித்துபூசை செய்வோன் 200

மாதங்கி காளியம்மன் வல்லகுமரீசர்
பாதங்கனிவுடனே பண்பாடிப் போற்றிடுவோன் 201

கூனநகர்க் கொத்துரிமை கொண்டுவளர் சென்னிமலைத்
தானகர்னன்சேய் பழனிச்சாமிதுரை வந்தடைந்தான் 202

வானரங்கள் கூத்தாடும் மாதருமஞ்சேர் பொழில்சூழ்
கூனநகரோங்குசிவ கோத்திரத்து நேத்திரமால் 203

துங்கமிகுந்துவளர் சோழிய வேளாளமுகில்
மங்களஞ் சேர்கின்ற மணவிநகராதிபனும் 204

தண்டாயுதம்பிடித்துத் தாரணியைச் சுற்றிவந்து
கண்டார் கலியகற்றிக் காட்டுமுனியப்பனையும் 205

அங்காளம்மைத்தாயை ஆனகந்தசாமியைச்சீர்
தங்குநயினார்மலையிற் சாரும் வரதரையும் 206

மாமணிவிக் காளியம்மன் வாழ்வாரிலுப்பிலியில்
தாமததுளவன் தழையழகராயனையும் 207

சந்ததமும் போற்றுரங்கசாமி மகிபன் றவத்தில்
தங்குவெங்கடாசமால் தாஷமகன் வந்தடைந்தான் 208

இக்குமணன் பின்னுதித்த ஏந்தல் தமிழருகை
மிக்குணர்ந்து பாவலர்கள் வேண்டுவன தந்திடுவோன் 209

சங்கோட விண்ணிற் றருவோட வந்துதித்த
செங்கோட மன்னன் சிறந்தசபையடைந்தான் 210

கூரும் அனுமக் கொடியுடனே கிட்கிந்தை
யூரும்படைத்தே யொளிரும் வசியகுலன் 211

பஞ்சாற்கரையடையப் பண்ணிமுட மாணிக்கம்
அஞ்சாமற் கோத்தபுகழாள னவ்வைமாலைகொண்டோன் 212

வல்ல பெரியநந்தி மாவிருடிகோத்திரத்தான்
நல்லவெங்கை அங்காள நாயகியைப் போற்றிசெய்தே 213

எங்கள் தமிழ் நாட்டின்வட வெல்லையெனும் வேங்கடத்தில்
தங்குந் திருமாலைச் சந்ததமும் பூசைகொள்வோன் 214

மாதவம்சேர் கூனநகர் வாழ்சீரங்கத்தருமன்
காதலனுந் தம்பணவேள் காணும் சபையடைந்தான் 215

மங்குல்பொழி கூனநகர் வாழும்பகவதியார்
பங்கயபொற்பாதம் பரவித் துதித்திடுவோன் 216

தென்னெல்லை மாநகரிற் சேர்ந்துவளர் வைஸ்யகுல
மன்னனெனு மாங்குன்ற மாவிருடிகோத்திரத்தான் 217

காவிரிப்பூம் பட்டினத்துக் கட்டழகன் ஆயிரவர்
மேவுகிளைஞனுயர் வெங்கை நகரங்கினன்பன் 218

ஏர்கொள் சிதம்பரரை ஏழுமலையாண்டவரைச்
சீர்கொள் பழனிவரைத் தெண்டாயுதத்துரையை 219

சந்ததமும் போற்றித் தழைத்தவெங்கடாசலமால்
மைந்தனென வந்துதித்து வாழுங்குபேரசெல்வன் 220

நன்னயஞ்சேர் துபசுப்பராய குணசீலன்
தென்னெல்லையாள் வேந்தனிடம் சிந்தமகிழ்வாகி வந்தான் 221

## மீனாக்ஷி வலசு.

ஆகியெனும் மீனாட்சி யம்பதியி லோங்கிவளர்
நீதமிகும்பவுனை நேர்காடை கோத்திரனும் 222

மாமருத காளியம்மன் வாழ்வுதரும் பாலமலைச்
சாமிகுகனைப்பரவும் சாந்தமிகு நன்னேமன் 223

சுக்கப்ப நீதனருள் சுந்தரனும் சீர் அருணை
மிக்கபழனிமலை வேந்தன் சபையடைந்தான் 224

தேனாட்சியான பொழில்சேர்ந்து வளம்பெருகு
மீனாட்சியம்பதிவாழ் வெண்டுவன் கூடற்கரசன். 225

அன்னை யருங்கரையின் அம்மனடியைப்பணியும்
கன்ன னெனும் நல்லணமால் காதல்மிகு மாபுதல்வன் 226

பந்தமுலைமடவார் பார்த்து மடலெழுதும்
சந்தப் பகவதிமால் தருமசபை யடைந்தான் 227

பவந்தர்மதிப்பு யருமீனாட்சியின் வலசிற்
வாழ்ந்துவரு கன்னிவாடியின் கண்ணந்தைகுலன் 228

ரோட்டைக் கரைந்துபுகழ் பாவலருக்காரருள்செய்
கோட்டைக் கரையம்மன் கோகனகதான் பணிவோள் 229

கற்ற கருப்பயமால் காதலன் செல்லப்பமன்னன்
கொற்றமிகுந் தேவணமால் கூடுஞ்சபையடைந்தான் 230

மன்னிய மீனாட்சிநகர்வாழ் யாதவர்மரபில்
பன்னி நிலைத்திடுகோ பாலகுலமாலோலன் 231

ஆதியரியோம் நமோநாராயணமா மாதவனை
நீதிவழுவாமல் நித்தந் துதிபுரிவோன் 232

சொர்ணமிகும் நல்லதம்பி தோன்றலென வந்துதித்தோன்
சின்னவடமலை வேள்சீர்கொள் சபையடைந்தான் 233

அன்னவயல்சூழ் மீனாட்சிநகர் வாழுகின்ற
மன்னனெங்கள் மாதவனார்வந்த யதுகுலத்தான் 234

கோசுகமதாய் வளர்க்குங் கோபால கோத்திரத்தான்
வாசன்பெரிய வடமலைவேள் தந்தமைந்தன் 235

மாரங்கநாதர் மலரடி பூசித்திடுவோன்
சிரங்கநீதன் சிறந்த சபையடைந்தான் 236

## தொண்டுக்காளிபாளையம்.

ஆளுமகுடேசர்மலை யம்மன் சிவகிரியான
நீளுமரத்தநாரீசர் நின்றதிங்களுர்த்தேவை 237

ஆடகமின்னுள் நடனமாடு தொண்டுக்காளிநகர்
நீடிவளர்தலைசை நின்றபொன் காளித்தாயார் 238

வண்ணார் கருப்பணனை வாழ்த்திடும் நற்கூரைகுலன்
எண்ணான் கரம்வளர்க்க ஏற்றமேழிக்கொடியோன் 239

கல்வியுணர்தவ கநகட்டியெனுங் குட்டியண்ணன்
செல்வனென வந்துதித்த சீலகந்தசாமிதுரை 240

கரோங்கி மேவுதொண்டுக் காளிநகர்தனிலே
பேரோங்கியெங்கும் பெருகிய கங்காதனையன் 241

கொண்டதலைய நல்லூர்க் கூரைகுலன் பொன்காழி
அண்டிய வண்ணார கருபயண்ணனையும் போற்றிடுவோன் 242

வாணர்க்குதவு மலையணவேள் தந்தமைந்தன்
தாணுவெனும் ராமசாமிமன்னன் வந்தடைந்தான் 243

காராளபோங்கு தொண்டுக் காளிநகர்வாழுகின்ற
தாராளன் கூடற்றழைத்த வெண்டுவக்குலத்தான் 244

ஆச்சியருங் கரைவாழ் அம்னடிமைப்பரவும்
பேச்சினுயர் நல்லணமால் பெற்றெடுத்த புத்ரரத்னம் 245

சம்பிரமமோங்குந் தனதனிணையான செல்வன்
தம்பணமகிபதியும் தர்மசபை யடைந்தான் 246

கஞ்சமணமேவு தொண்டுக் காளிநகர்தனிலே
மிஞ்சுதமிழ்க்கற்று விளங்கும் தியாகமுகில் 247

ஆழியெனவே அருங்கலைகள் கற்றுணர்ந்த
சோழிய வெள்ளாளகுலந் தோன்றிவந்த சற்குணன்வான் 248

பாச்சலிளையான் பரமத்தி சேரிளையான்
பேச்சிவிளையான் பெருகிவரு மெங்கிளையான் 249

நாச்சியராம் அங்காள் நாயகியைப் போற்றிநிதம்
வாச்சவருளால் கல்விமானெனவே வந்துதித்தோன் 250

கூருசிவ கோத்திரத்தான் கோட்டையண சாமிபதம்
பூரணமதாயப் பணியும் போதக நல்லாசிரியன் 251

தேசுப்பாராய சிவனார்க் கடியனெனும்
மாசுப்பாராய மகிபன்றவ புதல்வன் 252

கைப்பணத்தைவாரிக் கவிஞர்க் குதவுகொடைக்
குப்பண சுசீலன் குலாவும சபையடைந்தான் 253

தேன்பொழியுங் கூழைச் செல்லப்பனூரில்வளர்
வான்பரவுகின்ற கன்னிவாடியின் கண்ணந்தைகுலன் 254

நாட்டிற் புகழ்படைத்த நாயகி கங்காளியெனும்
கோட்டைக் கரையரசைக் கொண்டுதுதிசெய் சுகுணன் 255

மன்னிவளர் பொன்னியண மானுதவு நற்புதல்வன்
பன்னுபெரியணவேள பண்புடனே வந்தடைந்தான் 256

பால்வளஞ்சேரும் ஊற்றுப்பட்டிநகர் வாழுகின்ற
சேல்விழியார் மாரன் திகழ்காங்கயநாடன் 257

தாழ்குழலார் வள்ளியறச் சாலைதனிலே நிலையாம்
வாழ்மதிசேர் மாந்தீசர் மன் அழகநாச்சியம்மன் 258

விண்ணோறுஞ் சத்திசிவ வெற்பர் முதலோர்பதத்தை
பண்ணேறப் பாடிப்பரவி வளர் பில்லகுலன் 259

நல்லணமா லீன்றருளும் நாச்சப்ப் பூபதியும்
வல்லமைசேர் தேவணமால் வாழ்சபையில் வந்தடைந்தான் 260

தென்னெல்லைக் காட்டுநகர் சீர்பெறவே வாழுகின்ற
மண்மங்கல வேண்டுவக்குலத்தில் வந்துதித்தோன் 261

காளியம்மன் கஞ்சக் கழலிணையைப் போற்றியெந்த
நாளும் புகழ்பெருகி நன்றாகவாழ்தருமன் 262
ஆரியனகர்க்கருப்ப அண்ணனையும் வேந்தரையுங்
சீரிலுயர் ரங்கய்யன் செல்லாயியைத் துதிப்போன் 263
மன்னும்பட்டத்தா மகிபனருள் செல்லப்பக் [264
கன்னனெங்கள் தென்னெல்லைக் காவலன்முன் வந்தடைந்தான்
இன்னுமுளகிளைஞர் ஏற்றநண்பர்கள் முதலோர்
மன்னுஞ்சபைதனிலே வந்துமுறை யாயிருந்தார் 265
வந்தவர்களெல்லோரும் மன்னன்றனை நோக்கிச்
சிந்தைமகிழ்ந்தழைத்த சேதிசொல்லவேண்டு மென்றார் 266
சீலமிகுந்துவளர் தேவண நாதிபதி
மாலெனத் தன்பால்வளரும் வல்லமதியூகியெனும் 267
சிற்றப்பராசன் தினம் தருமமேசெயமென்
றற்றுமகிழ் நீலியணை வுத்தமனைத் தான்பார்த்து 268
காரணத்தைச் சொல்கவெனக் கட்டழகன் நீலியணைப்
பூரணனும் நேயர் பொருந்து சபையைப்பார்த்து 269
அன்பர்களே யாளிங்களையும் சில்மொழியை
இன்பமுடன் கேட்டருள்வீரென் றெடுத்துக்கூறிடுவான் 270

## தருமத்தின் பயன்.

பெம்மானருளாற் பிரமன் வகுத்தெடுத்த
இம்மாநிலத்தில் எழுப்பிறப்பு நான்குவிதம் 271
தோற்றம் எழுவகையாம் சொல்லும் எண்பதினான்கு
நூற்றையிணையாயிரமாம் நூலுரைக்கும் சீவர்கள்தாம் 272
ஊர்வ பதினொன்றாம் ஒன்பது மானிடமாம்
நீர்பறவை நாற்காலோ நேர்தொகைப் பத்தாகும் 278
தேவர் பதினான்கு சிதான் சேயன்வகுத்த
தாவரம் நாலைந்தாய்த் தழைத்த இவைதனிலே 279

மானிடராகப் பிறந்து வாழ்தலரிததினும்
ஊனமின்றிப் பெண்ணகன்றே யுற்பவித்தல் மிக்கரிது 280
ஆணவிதமே இவ்வப்புவியிற் றோன்றிடினும்
ஞானமுடன்கல்வி நயத்தலரிதவ்விதமே 281
ஞானமுடன்கல்வி நலம்பெறினும் நல்வழியில்
தானமுடனே தவம்புரிதல் மிக்கரிதே 282
தானமுடனே தவம்புரிந்தாராமாகில்
வானவர்கள்நாடு வழிதிறந்து கூப்பிடுமே 283
இத்தகைய மானிடருக் கேற்றவயதோ நூறு
அத்தனையும் பெற்றிடினும் மய்ம்பதைத் தூக்கங்கெடுக்கும் 284
பாதியையும் பேடையொடு பாலன் விடணுக்கியுறு
மீதிபசிபிணிநீள் விர்த்தாப்பிய மல்லலிற்போம் 285
ஆகையினால் நீர்க்குமிழி யாகுமிப் புலாலுடலை
வேகமுடனே வெறுத்தார் மிக்கமதியாளரெலாம் 286
தாரணியிலே யிவைகள் தாங்களரியாதனவோ
பாரமதியுடைய பண்புமிகு தோழர்களே 282
நாமெடுத்துச் சொல்லிடவு ஞாயமுண்டோ வுங்களுக்கு
மானிடராய் நாம்பிறந்தோம் மண்ணிலதற்கேற்க 283
ஞானந்தனையடைய நல்லொழுக்கத்தைப் பூண்டு
தானந் தவஞ்செய்து சத்தியத்தைக் கைப்பிடித்து 284
தெய்வமிகழாமல் சிந்தையை வீண்போக்காமல்
செய்வனசெய்தே கீர்த்திதேடுவதுதா னலமாம் 285
அன்னையர்கள் நிற்கவுவர்கள் யாவரையும் நாங்கள்வரச்
சொன்னதொருசேதி சொல்லுகிறோம் கேட்டிடுவீர் 286
நாடுபுகழும் நமது மணநாட்டில்
மாடுகன்றுவாட மழைகள் குறைவாச்சு 287
காரணம் யாதென்றிடிலோ கண்மணியாம் நீலியம்மன்
நாரணியாள் கோவிலிலே நம்முடைய முன்னோர்கள் 288

மெத்தப்பய பக்திவிஸ்வாசமா யமைத்து
வைத்தநந்தாதீபம் வரவர மிகக்குறைந்து 289
கட்டளைகளுந் தவறிக் காலாகாலத்தினிலே
திட்டமுடனேபூசை செய்யாம லேகினதால் 290
முட்டுப்பாடானதுவே முக்கியமல்லால் வேறு
கட்டுப்பாடில்லையெனக் கற்றோர்கள் கூறுகின்றார் 291
ஆனதினா லிக்குறைவை யாமகற்றி நன்மைபெற
மாகவரி நீலியம்மை மன்னிவளர் தளியில் 292
தேசம்புகழுந் திருநந்தா தீபமது
நேசமுடன் ஓங்கி நிலையாய் விளங்கிடவே 293
ஏற்படுத்தி வைத்ததன்மேல் இன்னுமிந்தமாநகரில்
பார்பெருகிவாழும் பலதேவதைகளுக்கும் 294
கல்லுங்காவேரி கதிரவனுஞ் சந்திரனும்
செல்லுங் காலம்வரைக்கும் சீர்பெருகுங் கட்டளையும் 295
செய்துவைக்க வேண்டுமொரு தீபமிட்டார் நீள்கயிலை
பெய்தியிருப்பார் இதற்கோர் தடையுமில்லை 296
கோவில்குளமும் குடிகிணறும் செய்துவைத்தோர்
பூவிலரசாய்வாழ்ந்து பொன்னுலகை யாள்வார்கள் 297
நந்தவனந்தோப்பு மடைசாலை செய்துவைத்தோர்
செந்திருமால் வாழ்பதியில் சீர்பெருகிவாழ்வார்கள் 298
தண்ணீர்ப்பந்தல் மடங்கள் சத்திரஞ் செய்தன்னமிட்டோர்
வெண்ணீற்றைப்பூசும் விமலன் பதியடைவார் 299
சந்தமிகும் பாடசாலையது கட்டிவைத்தால்
எந்த அறமுமதற் கீடாகமாட்டாதே 300
இப்படி யனேகபலன் ஏற்றமறை நூல்களிலே
செப்புகின்றதுங்கள் திருச்சித்தமென்னவென்று சொல்லி 301
மானமிகுந் தேவணமால் வாழ்சபையில் வேந்தர்களை
ஞானமிகு நீலியணை ராஜேந்திரன்வினவ 302

எந்தவிதம் நீங்கள் ஏற்பாடு செய்தாலும்
அந்தவிதம்நடக்க யாங்கள்சித்த மென்றார்கள் 303

அப்படியானாற் குறித்த ஆசாமி நீங்களெல்லாம்
ஒப்புடனேபப் பத்துரூபாய் தருவீரேல் 304

மொத்தத் தொகைசேர்த்து மொய்த்தவொரு பண்டாக்கிப்
பிற்பட்டதனைப் பெருகி வட்டியாற்பெருக்கி 305

கூடுந்தொகையாற் குறையாமலெந்நாளும்
நீடுநந்தா தீபமுடன் நேர்ந்த திருவாதிரையில் 306

தென்னெலையில் வாழ்கின்ற தேவேந்திர லிங்கருடன்
இன்னுமுள தேவதைகட் கேற்றவபிடேகமுமே 307

செய்துவரலாமெனவே சிரார்வனநகரில்
தெய்வசிந்தை மாறாத தேவணமாலேது சொல்வான் 308

தாங்களுரைத்ததுவே சம்மதமென்றானதற்கு
நாங்களுமவ் வாறென்றார் நண்பர்மற்றபேர்களுமே 309

அந்தப்படியாக யாவருங் கையொப்பமிட்டுச்
சொந்தப்பணத்தைத் துரிதமுடன் தந்தார்கள் 310

கூட்டுத் தொகைசேர்த்துக் கொண்டபண்டை நன்மணலூர்
நாட்டுத்தரும்வட்டி நாணயத்தார் பாற்கொடுத்து 311

வட்டிதனைப்பெருக்கி மார்கழியினாதிரையில்
திட்டமுடன் கட்டளைகள் செய்துவர நிச்சயித்து 312

நீதமுடனத்தருமம் நேர்பெறவே செய்வதினால்
மாதமு மும்மாரி மணநாட்டில் பெய்கிறதே 313

ஆகையினாலிந்நாட்டில் யாதோர் குறைவுமின்றி
வாகையுடன் கல்விசெல்வம் வாய்ந்துநிதம் வாழுகின்றார் 314

தேவேந்திரலிங்கர் சிவகாமித் தாய்வாழி
பூவேய்ந்த நீலியம்மன் பொன்னங் கழல்வாழி 315

தேவியானசாமி முதல் தேவர்களெல்லாம் வாழி
மாவிசயன் தென்னெல்லை மன்னரபிரான் வாழியவே 316

நாட்டுக் குடிவாழி நந்தாதீ பம்வாழி
மாட்டுப் பெருக்கம் மறையோர் மடம்வாழி 317

சத்திரமுஞ் சாலைமடம் தண்ணீர் பந்தல்வாழி
வித்தை யருளுமெங்கள் வேலு மயிலும்வாழி 318

திங்களு மும்மாரிபெய்யும் சீர்பெருகும் தார்வாழி
மங்கள காங்கேயன் வழுத்தும் தமிழ்வாழி 319

இக்காதல் கற்றோர் இயம்பிடவே கேட்டோர்கள்
எக்காலமும் வாழி யாவர்களும் வாழியவே 320

உ

வேலுமயிலுந்துணை.

மதுரை தமிழ்ச்சங்கத்து வித்துவானும் சித்தாந்த சரபமும் ஆகிய அஷ்டாவதானம் பூவை கல்யாணசுந்தர முதலியார் அவர்கள் இயற்றியது.

## வெண்பா.

செந்நெல்லைக் கொண்டவயல் செங்கரும்பின் முத்துதிர்க்கும்
தென்னெல்லை நீலியம்மைத் தேவியின்மேற்—பன்னெல்லை
மானும்சே டாசலஞ்சொல் வண்டமிழ்க்கா தற்குருசி
தேனும்பா லுங்கலந்த சீர்.

கரூர் நேடிவ் டாக்டரும், சங்கத்தமிழ் வல்லுநரும் ஆகிய
மருதையா பிள்ளையவர்கள் இயற்றியது.

கோவையார் கல்லாடம் கூறுவண்ண மேவுசந்தப்
பாவையாயந் தேயனது பாலுணர்ந்தேன்—காவையே
சாற்றுதரச் சேடா சலம்சொல்தென்ன லைக்காதல்
மாற்றுணர்ந்த லோர்கடின மாம்.

கரூர் வெண்ணெய்மலை

## முருகக்கடவுள் வண்ணம்.

தன தனந்தன தந்ததானதனா தனந்தன
தன தனந்தன தந்ததானதனா தனந்தன
தனதானனதத்த தனதானனதத்த
தனதானனதத்த தானன தானா
தனதனன தனதனன தனதனன தனதனன தானனா

தழிப்பு

திருமடந்தை நிறைந்த சீதரனா ருடன்கணி
கலைமடந்தை யிருந்த நாவுடையா-ரெனுங்கட
வுளரானவர் நத்தி யடிமாமுடி சற்று
முணரா துயர்வுற்ற மாதுமை பாகர்
இரவில் மங்கை மகிழ்ந்து கூடிடவே-யருந்தமிழ்
நவிலு சுந்தரர் தொண்டராயடியே-நிலம்பட
வருகாரண சித்தர் விளையாடலை நித்த
மிகவேபுரி யத்தர் காதினிலோது
திறல் பெருந்திய தங்கவேலுடையா-ரிலங்கிடு
பசுமை தங்கிய மஞ்சுகாணுதலா-லகந்தனில்
மிகவே களியுற்று மகளிரொடுபற்று
முதிர்வாய் நடிசித்ர மாமயிலீசர்
வருகுமடி யவர்களிடர் பருதியிம மெனுமுறைசெய் வீரவேள்.
சிலையடர்ந்து வளர்ந்த கானகமீ-துயர்ந்திடு
மிதணிவர்ந்து பெருங்குழா மெனவே-நெருங்கிடு
கிளியானவை சற்று மணுகாதணி பெற்ற
கவணுலெறி கற்பு மேவிய மாது
தனைமணந்திட வந்துமா மரமா-யெழுந்திடு
முசிதசம்ப்ரமர் கஞ்சமாமலரா-னிடந்தனில்
ஒருநாள் மறையிற்பொ ருளினா லுயர்வுற்ற
ப்ரணவாதரமுற்ற மாமனுவான
தெளிவையிங்குரை யென்று கூறிடவே-விதங்கெட
வனதயறிந்தவர் நொந்து வாடிடவே-கடுஞ்சிறை
தனிலேபடவைத்து விளையாடிடவத்தர்
மகனேயதுசற்று பேசெனவோத
பதிபரமர் செவியின்மறை முடிவையருள் பரமகுருநாதனார் (2)

93
11-26

தருவளர்ந்துய ரண்ட-மீதுறலா-லலைந்திடு
முடுவினம்பல கொந்து மாமலராய்-விளங்கிடு
பொதிகாசலமுற்ற குடமாமுனிபற்ற
நிலைபானது சொற்ற சாரதயாளன்
விழிதிறந்திடினுஞ் சொலானது நீ-புகன்றது
வழுவணங்கிய தென் றுகூறியமா-பெரும்புல
வனைநாடிய கெட்ட வினைமேவிய தெட்ட
சினைவாகிய துட்ட பூதவிரோதி
தனைவதஞ்செய் வந்த சேவகனு-மெதிர்ந்திடு
மவுணர்தங்குடல் சிந்தவேல் விடுமால்-வணங்கிடு
விழியாயிரமுற்ற புருகூதனை வெற்றி
முடிமேவிட வைத்த காரணநீதர்
கருதரிய தமிழிலுள பலகலைகள் முழுதுமருள போதனுர் (3)
சகலமங்கலமுங் குலாவியசீர்-புனைந்திடு
நிலைகொள்கொங்கி லுயர்ந்த பாடலினல்-விளங்கிடு
தலமேழினில் முற்பு கலுமாவணியுற்ற
அமராவதி பற்று மாகருவூரில்
நிலைசவுந்தரி பங்கிலாகியமா-டதின்பதி
யருளுமிங்கித மைந்தனுகியவேள்-பணிந்தவர்
பலபோதமிலும துரையாதருமன
னிறைமாமனதொடு வாசமதான
சரவணந்தனில் வந்தபாலகனுர்-பொருந்திய
குறவர்நங்கை யொடுந் தெய்வானைமினு-மிருந்திரு
புறமே யணியுற்ற விதமாய் நிலைபெற்ற
கருணைநிதி கொற்ற வேல்முருகேசர்
கனிவிளுெடு பாவுவெணெய் மலையினிடை வருகுமொருமானனுர்
அருள்பெருங்கடல் வந்தமாதரசோ-விணித்திரன்
அதிகசுந்தர ரம்பை மேனகையோ-தெரிந்தில
னிவராரிடை யற்ப முடையார் மலையொத்த
மூலைமேல் விலைபெற்ற வாசனைவீசு
களபசந்தன முங்குலாவிடவே-திரண்டெழல்
முனிவர்நெஞ்சு கலங்கி வாடிடவே-மதன்றுணை
யெனவே மலர் மெத்தை யருகேவர லுற்று
விளையாடிடல் கற்ற மாரிசமாதர்
அரவதின்பட மென்று சேலையுளே-விளங்கிடு
கடிதடங்கன மங்குலாடுகுலா-விடுஞ்செய
லெனவே யணிபெற்ற யெனதாவியை முற்று
மிகவேகவர்வுற்ற தாதரவாக
ஒருகொடியிலெனையடியுமொருவரிடர் களணியுமொழி சேதனோ.

அழகுமிஞ்சிய பஞ்சுபோலுமுலா-விளங்களிர்
மகிமைதங்கி யெழுந்த சீரடிநோ-புறும்படி
யலையீர் கபடத்தை விடுவீர் தலைநிற்க
வருவீர் பரமற்கு மாமுடிமீதி
லொருமடந்தை யிருந்து வாழதலாணீ-ரிங்கிலீ
ரெனவுணர்ந்து நிறைந்த மாமதியீர்-மதன்கணை
ஒருகோடிகள் விட்டு மிக வாதனை பட்டு
மதியானது கெட்டு வாடிடுபேயன்
அருகில்வந்துமோ ரின்சொல் கூறிடவாய்-திறந்திடில்
நிலைகொளுந்தர ளங்கள் வீழ்வுறுமோ-அதின்றிடில்
மொழியா விரதத்தை யுடையீரொளிலொத்த
தலவே பருவத்தில் வேதவிரோதம்
உசிதமல மவுனநிலை யதுகொளுதல் பழிவரு மனேகமே (6)
மருவியென்றுயர் சிந்துமாறருள்வீ-ரெனுந்ததி
பரிவுகொண்டவ ரன்புமீதுறவே-கலம்பக
மடல்கோவைகள் கொச்ச கமுநீள்கவியுற்ற
துரையேசலுமெட்டு மாகலைமேவு
தமிழ்வணம்பல சிங்கையூரனுதா-ரவஞ்சியி
லிறைவர் பங்குறு சுந்தரேஸ்வரிமேல்-விளம்பிடு
கவிமாலைகள் செப்பி வினோநாணினைவிட்டு
மடிமேல்வரலுற்று மோகமதாகி
மதனசம்பிரம ரஞ்சிதா துறையே-வருந்தலை
யினியடர்ந்துயர் கொங்கைமேனுனியே-நகம்பட
வருடாயட கெட்ட திருடாசுவைசற்று
மெலுடாபிடிவிட்டி டாதடடாநீ
அருவிபென மதஜலதி பெருகுசிற தெனவனிதை மீறவே (7)
வதனமண்டல மொன்றிவாய் மலரே-கனிந்திடு
மதுவருந்திபு மென்ற பாகிலையே-கரும்பென
வுணவே பலமூத்த மிடவே யிடையிற்கு
கவுசேலையைவிட்டு வீசிடுகாலை
மணிநிறைந்தொளிர் சின்றதாமரையே-முகந்தெதிர்
கரிகாரஞ்செய்து வண்டுபோலவுமே-யருந்தியு
மணைபோதிசை புட்க விருநால் முரலுற்று
விரையேலென மொத்தி யேதலைமீது
வளைகலென்றிட வந்துவீசியடா-பொறும் பொறும்
நவமிதென்று புரண்டு மேல்விழுவாள்-விடிந்திடு
வரையே யெனைவிட்ட வளுமேயலவெத்த
னைக[illegible]ழில்கற்ற போகநிதானி
யரிய்சுக [illegible]வரிவர் அறிவிலவர் துறவிலுறுவார்களே (8)

முற்றிற்று.

## இந்நூலாசிரியர் இதுவரை அச்சிட்ட புஸ்தகங்களாவன.

மயில்வாகனக் கடவுள் பதிகம்

ஸ்ரீரங்க வழிநடை சிந்து

வண்ணப்பதிகம்

ஆனந்த விநாயகர் பதிகம்

தாந்தோன்றி வழிநடைப் பதம்

பூகம்பக் கீர்த்தனை

பில்லூர்ப் பதிகம்

சென்னப்பை மாகாளியம்மன் பதிகம்

தியான மஞ்சரி

ஞானரச மஞ்சரி

கருவூர் கும்பாபிஷேகக் கும்மி

பாவடி விநாயகர் துதிமஞ்சரி, பாண்டமங்கலம்

வருகைப் பதிகம்

வேலாயுதசாமி துதிமஞ்சரி

மதிட்கரை செல்லாண்டியம்மை கவிமஞ்சரி

கரைச்சிலேடை வெண்பா

சிலேடை வெண்பாத் திரட்டு

புகழிமலைப் பதிகம்

நாமக்கல் விநோதச் சிந்து

நல்லூர்ப் பதிகம்

அங்காளம்மன் பதிகம்

திடசித்தக் கும்மி

சிதம்பரம் அன்னசாலைக் கும்மி

திருவானைக்கா மும்மணிக்கோவை

கல்யாணப்பாட்டு

பக்திரச மஞ்சரி

மஹாமாரிக்கும்மி

சூது விலக்கு

நீலியம்மன் காதல்